RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s22278

# சைவக் கண்மணி - காரைக்காலம்மையார்

க. பிரீதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, செவாலியர் டி.தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி, சென்னை-600011, தமிழ்நாடு, இந்தியா

# Saiva Kanmani - Karaikalammaiyar

K. Preetha [a, *]

[a] Department of Tamil, Chevalier T. Thomas Elizabeth College for Women, Chennai-600011, Tamil Nadu, India

* Corresponding Author: preethailamaran@gmail.com

Received: 19-09-2022
Revised: 15-11-2022
Accepted: 19-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Saivism has contributed a great deal of literary works to the Tamil literature. The devotional hymns sung by the Devaram, Manivasaka Peruman and other Shiva Selvaras have compiled into twelve volumes. These alone contain over eighteen thousand songs. And there are thousands of songs sung by soloists. The 14 books of Saiva religious scriptures including Shiva Gnana Sidhyar continue to increase the collection of Saiva books. Since Shiva worship has flourished in Tamil Nadu since ancient times, such devotional experiences can be said to have flourished over time. Of the sixty-three Nayanmars, three were female writers. They are Karaikalammaiyar, Mangaiyarkarasiyar and Isainiyaniar. Among these three Karaikalammaiyar is honored to have worshiped Lord Shiva with Tamil Pa flowers. The glory of Karaikalammaiyar, who is a wonderful devotee of the Lord Shiva, and the devotional works she created and the literary traditions shown by her are explored in this article. Her most important devotional works are Arputha Thuruvanthaathi, Thiru Irattai Manimaalai and Thiruvalangkaatu Mooththa Thirupathikangal.

**Keywords:** Karaikalammaiyar, Saiva religion, Devotional, Shiva worship

## முன்னுரை

காரைக்காலம்மையாரின் படைப்பிலக்கியங்கள் சிவனிடம் அவர் வைத்த அன்பினைக் கருப்பொருளாகக் கொண்டு இயல்கின்றன. அம்மையாரின் வரலாற்றை அறிய அவர்தாம் படைப்புக்களும் சுந்தரமூர்த்தி நாயனார் நம்பியாண்டார் நம்பிகள் சேக்கிழார் பெருமான் ஆகியோரின் தரவுகள் அடிப்படையாக அமைந்துள்ளன. அம்மையார் 'காரைக்கால் பேய்' என்று தம்மை அழைத்துக் கொள்கின்றார். அதுதான் 'பேயார்' என்று சுந்தரமூர்த்தி நாயனார் குறிப்பிடக் காரணமாயிற்று.

ஈசன் 'அம்மையே வருக' என்று அம்மையாரை அழைத்தார். சைவ உலகத்தார் அம்மையாரை ஏற்றித் துதிப்பதற்கும் ஆலயங்களில் ஏனைய நாயன்மார்களின் திருவுருவச் சிலைகள் நின்ற கோலத்தில் இருக்க அம்மையார் திருமேனி மட்டும் அமர்ந்த கோலத்தில் இருப்பதற்கும் அதுவே காரணமாயிற்று. அம்மையார் அற்புதத் திருவந்தாதியில் இறைவன் தம்மைப் பாராது எந்த இழிநிலையில் விட்டாலும் அவனுக்கான அன்பு தம் நெஞ்சத்தில் எப்போதும் நீங்காது எனப் பாடுகின்றார். அது, அவர் சிவன் மீது வைத்த ஆழ்ந்த பற்றுள்ளத்தைத் தெற்றென விளக்குவதாய் உள்ளது.

காரைக்கால் அம்மையார் முன்னைத் தவப்பயனால் உண்டான சிவநேசத் திறத்தினால் இறைவனிடம் வேண்டியதை அடையும் வல்லமை பெற்றிருந்தார். அதனால்தான், தன் கணவனுக்கு இரண்டு முறையும் அதிமதுர மாங்கனிகளைத் தருவித்து வழங்க அவரால் முடிந்தது. மேலும் ஆடல்வல்லானிடம் வேண்டுதல் வைத்து என்புருவத்தையும் பெற முடிந்தது. இறைவன் திருவடியில் எப்போதும் கருத்தைச் செலுத்தினால் வேண்டிய எதையும் உடனே எய்தலாம் என அற்புதத் திருவந்தாதியில் அம்மையார் பாடியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

காரைக்காலம்மையாரின் இடையறாத சிவப்பற்று அவரை முக்தியின்பத்தில் கொண்டு சேர்த்தது. இச்செய்தியைக் காலனை வென்று அருவினைகளையும் வேரறுத்துத் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளின் பொற்பாதக் கமலங்களைச் சார்ந்ததாக அற்புதத் திருவந்தாதியில் பதிவு செய்துள்ளார்.

காரைக்காலம்மையார் பரமனைப் பாடும் சிறந்த படைப்பாளராக விளங்குகின்றார். இவர் பாடியுள்ள அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்கள் இரண்டு, திரு இரட்டை மணிமாலை ஆகிய பனுவல்கள் அவர்தம் படைப்பாற்றலைப் பறை சாற்றிக் கொண்டுள்ளன. அற்புதத் திருவந்தாதியில் கற்பனை வளத்தை எடுத்தோதும் வெண்பாக்கள் சில உள்ளன.

சிவபெருமானின் சென்னியில் விளங்கும் வண்ணப் பிறை நிலவிலிருந்து வெள்ளிய ஒளிக்கீற்று அவர் மேனியில் ஆழ்ந்து இறங்குவதைப் போல பெருமான் அணிந்திருக்கும் முப்புரிநூல் உள்ளது என அம்மையார் செய்திருக்கும் கற்பனை என்றும் புதுமை இன்பத்தை வழங்குவதாய் உள்ளது. அம்மையார் மூத்தத் திருப்பதிகங்களில் செய்திருக்கும் ஆலங்காட்டு மயான வருணனைகளும் பொருத்திக் காட்டும் உவமைகளும் நெஞ்சம் அள்ளும் வகையாய் மிளிர்கின்றன. மொத்தத்தில் செந்தமிழ் உலகமும் சிவச்செல்வர்களின் மரபும் சித்தத்தில் வைத்து நித்தம் கொண்டாடும் வித்தகப் பெருமாட்டியாய் காரைக்காலம்மையார் விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது.

## காரைக்காலம்மையார்

இன்றைய புதுவை மாநிலத்தில் உள்ள காரைக்காலில் 1500 ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியவர் காரைக்காலம்மையார். சிற்றிளம் பருவம் முதற் கொண்டே சிவனை மறவாத சிந்தையராய் விளங்கினாரென்பது,

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்

சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்" (Narayana Velupillai, 1998)

என்று அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதிப் பாடலடிகளால் தெரிய வருகின்றது. வணிகர் குலத்தில் பிறந்து புனிதவதியார் எனப் பெயர் சூட்டப் பெற்ற காரைக்காலம்மையார் வளர்ந்து பருவம் எய்திய பின்னர், நாகைப் பட்டினத்தைச் சேர்ந்த பரமதத்தனுக்குத் திருமணம் முடித்து வைக்கப்படுகின்றார். இவர்தம் வாழ்க்கை ஆன்மிகத்தின் பக்கம் திரும்பப் பெற்று சிவனையே வழிபாடு செய்து இறுதியில் முத்திப்பேறு அடைவதற்குரியதாய் மாறியது. அதன் காரணமாக இல்லற வாழ்க்கைப் பயணம் இடையிலேயே தடைப்படலாயிற்று. இச்செய்தியைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் அம்மையார் திருமணத்தைப் பாடும்போது குறிப்பால் உணர்த்தியிருக்கின்றார்.

"தளிர் அடிமென் நகைமயிலைத் தாதுஅவிழ்தார்க் காளைக்குக்

களிமகிழ்சுற் றம்போற்றக் கல்யணம் செய்தார்கள்" (Kalyana Sundaram, 1993)

எனக் குறிப்பிடுகின்றார். ஈசனைத் துதித்து பரமஞானத்தில் ஆனந்திக்க வேண்டிய அம்மையாரைப் பரமதத்தனோடு இணைத்தது பொருந்தாத் திருமணம் என்பதை உணர்த்த வந்த சேக்கிழார் மயிலுக்கும் காளைக்கும் கலியாணம் செய்தார்கள் எனக் கூறுகின்றார். இறைவனை வேண்டி அதிமதுர மாங்கனியைப் பெறுமளவிற்குப் பக்திப் பெருவல்லமை படைத்தவர். தன் மனைவி புனிதவதியார் என்பதை அறிந்ததும் பரமதத்தன் உள்ளுக்குள் அச்சம் கொள்கின்றான். வணிகத்தின் பொருட்டுச் செல்வதாய்க் கூறிக் கலமேறிக் கடல் கடந்து சென்றவன் பொருளீட்டிக் கொண்டு

காரைக்கால் திரும்பாமல் பாண்டிய நாட்டின் ஒரு பதியைச் சென்று சேர்கிறான். அங்கு வேறொரு பெண்ணை மணந்து பெண் மகவொன்றைப் பெற்று அக்குழவிக்குப் புனிதவதி என்று பெயர் சூட்டுகின்றான். இச்செய்கை அவன் புனிவதியாரைத் தன் மனைவி என்று கருதாமல் தெய்வ மங்கை என்று போற்றியதால் விளைந்ததாகும். தன் கணவன் தென்பாண்டி நாட்டில் வாழ்ந்து வருவதையறிந்த அம்மையார் சுற்றத்தால் சூழப் பரமதத்தனை நாடிச் செல்கின்றார். அவனோ தன் இரண்டாம் மனைவி குழந்தையுடன் வந்து புனிதவதியாரை வணங்குகின்றான். இச்செயலால் உலக வாழ்வியலை வெறுத்த புனிதவதியார் துறவு நிலைக்கு மாறுகின்றார். கணவனுக்கு உதவாத அழகு இனி வேண்டாமென இறைவனை வேண்டி என்புருவம் கொள்ளுகின்றார். இது பேயுருவம் என அழைக்கப்படுகின்றது. மழலைப் பருவத்திலிருந்து படிப்படியாக அம்மையார் வளர்ந்து வந்த நேர்த்தியைச் சேக்கிழார் பெருமான்,

"விடையவர்பால்

அல்கியஅன் புடன்அழகின் கொழுந்துஎழுவது எனவளர்வார்" (Kalyana Sundaram, 1993)

எனப் பாடுகின்றார். அழகின் கொழுந்தாக விளங்கியவர் இளமைச் சோலையில் உலவியவர். செல்வக் குடும்பத்தில் செழிப்போடு வாழ்ந்தவர். அனைத்தையும் துறந்து என்புருவம் தாங்கி ஈசனை நாடிக் கயிலைக்குப் பயணப்பட்ட துறவு மனத்தை என்னென்று வியப்பது!

யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை ஆகிய மூன்றையும் உணர்ந்து அவற்றை ஒரு நொடிப் பொழுதில் முற்றிலும் துறந்த உன்னதப் பெண் துறவி காரைக்காலம்மையார் ஆவார். அதனால் தான் ஈசன் ஆலயங்களில் எழுந்தருளப் பெற்றுள்ள அறுபத்துமூவர் தெய்வத் திருமேனிகளில் அம்மையார் திருவுருவச் சிலை மட்டும் அமர்ந்த கோலத்தில் காட்சி அளிக்கின்றது. இது அம்மையாருக்குச் சைவ உலகம் வழங்கி வரும் பத்திமை கலந்த பெருமதிப்பின் அடையாளமாகும்.

காரைக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்தத் திருபதிகங்கள் இரண்டின் இறுதிப் பாடல்களில் தம்மை 'காரைக்கால் பேய்' என்று அழைத்துக் கொள்கிறார்.

"அப்பனை அணிதிரு ஆலங்காட்டுள்

அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்

செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்

சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே

காடு மலிந்த கனல்வாய்

எயிற்றுக் காரைக் காற்பேய்தன்

பாடல் பத்தும் பாடி

ஆட பாவம் நாசமே" (Narayana Velupillai, 1998)

சிவபெருமானைக் குறித்துக் காரைக்கால் பேயாகிய தான் பாடிய பாடல்கள் அனைத்தையும் பத்தியுடன் பயில்பவர் சிவகதி சேர்ந்து இன்பம் எய்துவார்கள் என்றும் அவர்தம் பாவங்கள் நாசமாகும் என்றும் நூற்பயன் கூறியுள்ளார். 'காரைக்கால் பேய்' என்று தம்மைக் கூறிக் கொள்ளும் அக்காரணம் பற்றியே 'திருத்தொண்டத் தொகை' பாடியருளிய சுந்தரமூர்த்தி நாயனாரும், 'பேயார்க்கும் அடியேன்' (Sudaramoorthi Swamigal, 2005) என்று காரைக்காலம்மையாரைச் சுட்டுகின்றார்.

சுந்தரர் பெருமானுக்குப் பின் வந்த நம்பியாண்டார் நம்பிகள் நாயன்மார்கள். வரலாற்றைச் சற்றே விரித்துப் பாடினார். கயிலை மலைக்குச் சென்ற காரைக்காலம்மையார் இறைவன் கோயில் கொண்டுள்ள அம்மலையின் மேல் பாதங்கள் பதித்து ஏறலாகாது என எண்ணி தலையாலே நடந்து சென்றார். அதைக் கண்டஉமையம்மை நகைத்தாள். ஈசனோ,

என் அம்மை வருகிறாள் எனக் கூறி 'அம்மையே வருக என அழைத்தான்' எனும் செய்தி நம்பியாண்டார் நம்பிகள் ஒரு பாடலால் பாடிச் செல்கின்றார்.

"நம்பன் திருமலை நான்மிதி

யேன்எனறு தாள் இரண்டும்

உம்பர் மிசைத்தலை யால் நடந்து

ஏற உமைநகலும்

செம்பொன் உருவன்என் அம்மை

எனப்பெற் றவள் செழுந்தேன்

கொம்பின் உருகாரைக் காலினின்

மேய குலதனமே" (Narayana Velupillai, 1998)

என்பது அப்பாடல். சுந்தரரும் நம்பியாண்டார் நம்பிகளும் தொகுத்தும் வகுத்தும் சொன்ன காரைக்காலம்மையாரின் வரலாற்றை, அவர்களுக்குப் பின் வந்த சேக்கிழார் பெருமான் விரிவாகப் பாடியுள்ளார்.

## அம்மையாரின் பக்தித் திறம்

காரைக்காலம்மையார் மழலைப் பருவத்திலிருந்தே ஈசன் மீது ஆராக் காதல் வளர்த்து வந்தார். இத்தகைய பக்திப் பெருக்குப் பல பிறவிகளில் சிவச் சிந்தனையோடு வாழ்ந்து வருவதால் அமைகின்ற பிறவித் தொடர்ச்சியாகும். திருஞானசம்பந்தப் பெருமான் மூன்று வயதிலேயே ஞானப்பால் உண்டு 'தோடுடைய செவியன்' எனத் தேவாரம் பாடியதற்கும் இப்பிறவித் தொடர்பே காரணமாய் அமைந்தது. இதைத்தான் வள்ளுவப் பெருந்தகையும்,

"தவமும் தவமுடையார்க் காகும் - அவதம்அதனை

அஃதிலார் மேற்கொள் வது" (Puliyur Kesigan, 2016)

எனக் கூறுகின்றார். முன்னைத் தவப்பயன் உடையார்க்கே தற்போது எடுக்கின்ற பிறவியிலும் அத்தவமானது பெருகி ஆன்ம வலிமையைக் கூட்டும் எனக் குறளாசான் உரைப்பது இங்குப் பொருத்திப் பார்க்கத் தக்கதாகும். காரைக்காலம்மையார் இறைவனை அன்பால் வணங்குதலையே தலையாய கடனாகக் கொண்டிருந்தார். உயிர்களின் பொது இயல்பே எதையேனும் வழங்கும்படி இறைவனை வேண்டி நிற்பதுதான். உலகியலார் நிகழ்த்தும் வழிபாடுகளெல்லாம் தத்தம் குறைகளைத் தீர்க்குமாறும் துன்பம் துடைக்குமாறும் செல்வ வளம் பெருகுமாறும் புரிகின்ற வேண்டுதலாக அமைகின்றன.

அடியார் பெருமக்கள் முத்தியின்பம் வழங்குமாறு ஆண்டவனை வேண்டுகின்றனர். சிவனருட் செல்வர்களான நாயன்மார்கள் அன்பு செலுத்தவே இறைவனைப் பூசனை செய்தனர் எனச் சேக்கிழார் பெருமான் இசைக்கின்றார்.

"கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி

வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" (Kalyana Sundaram, 1993)

என்பது பெரிய புராணச் செய்யுள். இத்தகைய நாயன்மார்களுள் குறிப்பிடத்தக்கவராய் அம்மையார் விளங்குகின்றார். அதனால்தான் சிவபெருமான் தனக்கு எதுவும் செய்யா விட்டாலும் தன் நெஞ்சத்தில் ஈசன் மீது வைத்த அன்பு என்றுமே நீங்காது என அற்புதத் திருவந்தாதியில் அருளிச் செய்துள்ளார்.

"இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்

படலும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்

என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்(கு)

அன்பறாது என்நெஞ் சவர்க்கு" (Narayana Velupillai, 1998)

என்பது அம்மையார் வாக்கு. இறைவனாகிய சிவபெருமான் அண்டப்பேரண்டங்கள் யாவற்றையும் அருளாணையைக் கொண்டே இயக்கி ஆளுகின்றான் எனச் சைவ சித்தாந்தம் வகுத்துரைக்கும். அந்த அருட் சக்தியே உமையம்மையெனச் சைவ உலகம் போற்றித் துதிக்கின்றது. சிவனையும் அருளையும் பிரிக்க முடியாது என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே மாதொரு பாகன் என்னும் வழிபாட்டுக் கொள்கை உருவாயிற்று. இந்தக் கருத்தை விளக்கும் வகையில் காரைக்காலம்மையார் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

"அருளே, உலகெலாம் ஆள்விப்ப(து) ஈசன்

அருளே, பிறப்பறுப்ப தானால் அருளாலே

மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்

எப்பொருளும் ஆவ (து) எனக்கு" (Narayana Velupillai, 1998)

அருளைக் கொண்டு உலகங்களை ஆள்வது மட்டுமல்லாமல் முத்தியை விரும்பும் உயிர்களை அருளாலே உய்வு பெற வைக்கின்றான். காரைக்காலம்மையார் மெய்ப்பொருளாகிய இறைவனைக் காண விழைந்தார். அவ்வம்மையாருக்கு இறைவனைக் காண உதவியதும் அவ்வருளே ஆகும். அவர் ஞான வடிவமாகத் திகழ்வதால் அந்த அருட்சக்தியே எந்நேரத்திலும் காணும் எப்பொருளாகவும் காட்சி வழங்கியது எனக் கூறுகின்றார். அன்பு ததும்பும் ஞானப் பெருமக்களுக்கு காணுகின்ற எக்காட்சியும் இறை வடிவமாகவே தோன்றும். ஊனக் கண்ணால் காண்பவர்க்கு உலகியல் பொருட்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறாய் பேதக் காட்சி வழங்கும். இக்கருத்தைத் தாயுமானவடிகள்,

"அருளாளே எத்தையும் பாரென்றான் அத்தை

அறியாதே அறிவாலே பார்த்தேன் - எங்கும்

இருளான பொருள்கண்ட தல்லால் கண்ட

என்னையும் கண்டிலேன் என்னேடி தோழி" (Vadivelu Mudhaliyar, 2011)

எனப் பாடி அருட்காட்சியின் மகிமையை உணர்த்துகின்றார். அறிவைக் கொண்டு ஆராய்ந்தால் 'பசு ஞானம்' எனப்படும் உலகியலறிவு வேண்டுமானால் பெருகலாம். அருளைக் கொண்டு நோக்கினால் பதிஞானமாகிய மெய்யறிவு விரிவடைந்து பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் இறைவனைக் காணும் ஆற்றல் பெருகும். இச்செய்தியைத்தான் காரைக்காலம்மையார்,

"அருளாலே மெய்பொருளை நோக்கும்

விதியுடையேன்' எனவும் அந்த அருளே,

'எஞ்ஞான்றும் எப்பொருளும் ஆவ (து)" (Narayana Velupillai, 1998)

எனக் கசிந்து உருகிப் பாடுகின்றார்.

'இறைவனைப் பரிபூரணன்' என வேதங்கள் பேசுகின்றன. 'வாலறிவன்' என வள்ளுவர் அழைக்கின்றார். உயிர்கள் அறியும் ஆறறிவாகவும் அருளால் உணரும் மெய்யறிவாகவும் அவற்றை அறிவிப்பவனாகவும் அனைத்தையும்தானே அறிபவனாகவும் மற்ற எல்லாப் பொருளாகவும் இறைவனே விளங்குகின்றான் எனக் காரைக்காலம்மையார் பாடுகின்றார்.

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே

அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற

மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்

அப்பொருளுந் தானே அவன்" (Narayana Velupillai, 1998)

இறைவன் தானே அறிதல், முழுதும் அறிதல், இடைவிடாது அறிதல் ஆகிய அறிவு இயல்புகளைக் கொண்டவன். ஆனால் உயிர்களுக்கு இத்தகைய தன்மைகள் இல்லை அறிவிக்க அறிதல், ஒவ்வொன்றாய் அறிதல், இடைவிட்டு அறிதல், அழுந்தி அறிதல் ஆகிய அறிவுக் குறைபாடுகளைக் கொண்டவை. அதனால்தான், 'அறிவா னுந்தானே அறிவிப்பான்தானே' எனத் தொடங்கி இறைவனைப் போற்றுகின்றார் அம்மையார். இறைவன் அருளாலே அடியார்கள் மெய்ஞானம் பெற்று அவன் திருவடியைக் காணும் பேறு பெறுகின்றார்கள். இக்காரணம் பற்றியே அம்மையார்,

'அறிகின்ற மெய்பொருளும் தானே' என விதந்து ஒதுகின்றார். இதே கருத்தை மணிவாசப் பெருமான், 'மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே'(கா. சுப்ரமணிய பிள்ளை, 2009) என்னும் தொடரில் அமைத்துப் பாடுகின்றார். அப்பர் பெருமானும், 'காண்பார் யார் கண்ணுதலாய் காட்டாக் காலே' (Sudaramoorthi Swamigal, 2006) எனப் பாடி இறைவன் அறிவிக்கவே எல்லா ஞானமும் விளைகின்றன என விளக்குகின்றார். இவற்றை நோக்கும் போது ஞானப் பெருமக்கள் அனைவரும் ஒருமித்த இறையனுபவம் உடையவராய் விளங்குவது புலனாகின்றது.

## வேண்டியது விளைக்கும் ஆற்றல்

துறவு நிலையிலிருந்து தவநெறியில் ஒழுகுபவர்கள் எதை வேண்டினாலும் அதை உடனே அடைவார்கள். அவர்களின் ஆன்மாவில் இறையாற்றல் பெருகுவதால் இத்தகைய பெருநிலை உண்டாகிறது. அவர்களின் எண்ணம் வலிமை சான்றதாகவும் அவர்களின் வாக்கு நிறைமொழியாகவும் அவர்களின் செயல் இறைமணம் கமழ்வதாகவும் அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அதனால்தான் வள்ளுவப் பெருந்தகையும்,

"வேண்டிய வேண்டியாங்கி எய்தலால் செய்தவம்

ஈண்டு முயலப் படும்" (Puliyur Kesigan, 2016)

எனப் பேசுகின்றார்.

"வேண்டுநர் வேண்டியாங்கு எய்துவர்" (Subramanian, 2003)

என நக்கீரர் பெருமான் நவில்கின்றார்.

காரைக்காலம்மையார் உள்ளத்தால் எண்ணியதையும் வாக்கினால் ஈசனிடம் வேண்டியதையும் உடனே அணையப் பெற்றார்கள் என்று பெரிய புராணம் உரைக்கின்றது. அதற்குக் காரணம் அவ்வம்மையார் சிவனை மறவாத சிந்தையராய் ஒடுகிய தவச்சீலமே ஆகும். இச்செய்தியை அற்புதத் திருவந்தாதியில், அவர் அழகுறப் பேசுகின்றார்.

"கருத்தினால் நீ கருதிற் றெல்லாம் உடனே

திருத்தலாம் சிக்கெனநான் சொன்னேன் - பருத்தரங்க

வெள்ளநீர் ஏற்றான் அடிக்கமலம் நீ விரும்பி

உள்ளமே எப்போதும் ஓது" (Narayana Velupillai, 1998)

என்பது வெண்பா. காரைக்காலம்மையார் தமது உள்ளத்தை நோக்கிப் பேசுகின்றார்.

"என் நெஞ்சமே! பெரிய அலைகள் அடிக்கும் கங்கை நீரை தலையில் வைத்திருப்பவன் ஈசன். 'அவனுடைய திருவடித் தாமரைகளை நீ எப்போதும் ஓதுவாயாக. அவ்வாறு ஓதினால் நீ எது வேண்டுமெனக் கருதுகின்றாயோ? அதையெல்லாம் உடனே முழுமையாக அடையலாம். இதை பற்று உறுதியோடு நான் உனக்கும் சொல்கிறேன்" என்பது மேற்கண்ட பாடலின் கருத்து இப்பாடல் கருத்துப்படியே அம்மையாரின் வாழ்வில் நடந்துள்ளன.

கணவன் பரமதத்தன் வீட்டிற்கு கொடுத்தனுப்பிய இருமாங்கனிகளில் ஒன்றைச் சிவனடியார்க்கு அம்மையார் படைத்து விடுகின்றார். இல்லத்திற்கு உணவுண்ண வந்த கணவனுக்கு மற்றொன்றை

படைக்கின்றார். அதன் சுவையறிந்த கணவன் இரண்டாவது கனியைக் கொணருமாறு கேட்கின்றார். கணவனை மறுத்தறியாத காரைக்காலம்மையார் இறைவனை வேண்டுகின்றார்.

வேண்டிய உடனே மிகுந்த சுவையுடைய மாங்கனியொன்று இறைவன் அருளால் அவர் கையகத்தில் வந்து தோன்றியது. இச்செய்தியைத் தெய்வச் சேக்கிழார் பெருமான், அம்மருங்கு நின்றுஅயர்வார் அரும்கனிக்கு அவர் என் செய்வார்?

"மெய்ம்றந்து நினைந்து இடத்துஉதவும் விடையவர்தாள்

தம்மனம்கொண் டுஉணர்தலுமே அவர் அருளால் தாழ்குழலார்

கைம்மருங்கு வந்திருந்தது அதிமரதுரக் கனிஒன்று" (Kalyana Sundaram, 1993)

எனப் பாடிச் செல்கின்றார். 'விடையவர்தாள் தம் மனம் கொண்டு உணர்தலுமே' என்னும் சேக்கிழாரின் தொடரையும்.

'கருத்தினால் நீ கருதிற் றெல்லாம் உடனே திருத்தலாம்' என்னும் அற்புதத் திருஅந்தாதி தொடரையும் ஒப்ப வைத்து நோக்கினால் அம்மையாரின் உள்ளக்கிடக்கையைச் சேக்கிழார் பெருமான் அப்படியே உள்வாங்கிப் பிரதிபலிக்கிறார் என்பது தெரிய வரும்.

அதி மதுர மாங்கனியைத் தின்று அது மிக மிகச் சுவையாய் இருப்பதை யறிந்த பரமதத்தன் அக்கனி பற்றி மனைவியிடம் விசாரிக்கிறான். அம்மையார் நிகழ்ந்ததை உரைக்க, அதை நம்ப முடியாமல் இன்னும் ஒரு கனியைத் தருவிக்குமாறு மனைவியிடம் கேட்கிறான். அதற்கிணங்கிய அம்மையாரும் ஆண்டவனை வேண்டுகிறார். அவ்வாறே கனியொன்று வந்து பரமதத்தன் கை பட்டவுடன் மறைகின்றது. இவ் அற்புதச் செயலைச் சேக்கிழார்,

"பாங்கு அகன்று மனைவியார் பணிஅணிவார் தமைப்பரவி

ஈங்குஇது அளித் தருளீரேல் என்உரைபொய் ஆம்என்ன

மாங்கனி ஒன்று அருளால்வந்து எய்துதலும், மற்றதனை

ஆங்குஅவன்கைக் கொடுத்தலுமே அதிசயித்து வாங்கினான்

வணிகனும் தன்கைப் புக்க

மாங்கனி பின்னைக் காணான்" (Kalyana Sundaram, 1993)

என விவரிக்கின்றார். காரைக்காலம்மையார் கருத்தினால் திருத்தியது. இவ்வற்புதச் செயல் மட்டுமன்று இல்லற வாழ்வு இல்லையென்று ஆனவுடன் இறைவனை வேண்டிப் பேய் வடிவு பெற்றதும் இதில் அடங்கும்.

"ஈங்குஇவன் குறித்த கொள்கைஇது, இனி இவனுக்காகத்

தாங்கிய வனப்பு நின்ற

தசைப்பொதி கழித்து இங்கு உன்பால்

ஆங்குநின் தாள்கள் போற்றும்

பேய்வடிவு அடியேனுக்குப்

பாங்குற வேண்டும் என்று

பரமர்தாள் பரவி நின்றார்.

ஆனஅப் பொழுது மன்றுள்

ஆடுவார் அருளி னாலே

மேல்நெறி உணர்வு கூர

வேண்டிற்றே பெறுவார் மெய்யில்

ஊன்அடை வனப்பை எல்லாம்

உதறிஎன் புடம்பே ஆக

வானமும் மண்ணும் எல்லாம்

வணங்குபேய் வடிவம் ஆனார்" (Kalyana Sundaram, 1993)

என அம்மையாரின் தவ ஆற்றல் பெருமையைத் தெய்வச் சேக்கிழார் பக்திப் பரவசத்துடன் பாடிப் பரவுகின்றார். இவ்வாறான இறையருள் வளத்தைக் கொண்டவராகக் காரைக்காலம்மையார் விளங்கினாரென்பது அவர்தம் படைப்புகளாலும் சேக்கிழார் பெருமானின் தீந்தமிழ்ப் பாக்களாலும் உணர முடிகிறது.

## அறனடிக்கீழ் அமர்ந்த முத்திப்பேறு

திருக்கயிலையில் இறைவன் 'அம்மையே' வருக என அம்மையை அழைக்கின்றான். அதன் பின்னர் திருவாலங்காட்டிற்கு வருமாறு பணிக்கின்றான். அவ்வாறே அம்மையார் திருவாலங்காட்டிற்கு வருகை தருகின்றார். மயானத்தில் ஈசன் ஆடும் மகிமையைக் காணுகின்றார். சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் சங்கல்ப மாத்திரையால் நிகழ்த்துபவன். அவ்வாறிருக்க அவன் அழித்தல் கடவுளாகி மயானத்தில் ஆடுகின்றான் என்பது அறியாமல் பேசுவதாகும். அண்ட பேரண்டங்கள் அனைத்தையும் உயிர்கள் அனைத்தையும் இறைவன் ஊழிக் காலத்து முடிவில் தனக்குள் ஒடுக்கிக் கொள்வான். இது மகா சங்காரம் அல்லது முற்றழிப்பு எனப்படும். இந்த முற்றழிப்புக் காலத்திலும் இறைவன் திருநடனம் ஆன்மாக்களைக் காக்கும் பொருட்டு நிகழ்ந்து கொண்டேயிருக்கும். இதைத்தான் ஞானப் பெருமக்கள் மயானத்தில் ஆடுதல் எனக் குறிக்கின்றனர். மயானத்தில் ஈசன் ஆடும் காட்சியைத் திருவாலங்காட்டில் கண்ட காரைக்காலம்மையார் அதைச் சுடுகாட்டு நடனமாகக் காணாமல் பிரபஞ்ச ஆடலாகவே கண்டுகளிக்கின்றார்.

ஆடல் வல்ல நடராசப் பெருமான் திருவடிகளைப் பெயர்த்து ஆடினால் பாதாளம் முற்றிலும் பெயர்ந்து போகும். திருமுடியை உயர்த்தி ஆடினால் வானமுகடும் நிலைதளர்ந்து போகும். வளையணிந்த, கைகளை வீசி ஈசன் ஆடினால் எட்டுத் திசைகளும் கதிகலங்கிப் போகும். அப்படியிருக்கத் திருவாலங்காட்டு மயானம் அவன் ஆடலுக்கு உகந்த மேடையாக முடியுமா? எனக் காரைக்காலம்மையார் பாடுகின்றார்.

"அடிபேரின் பாதாளம் பேரும் அடிகள்

முடிப்பேரின் மாமுகடு பேரும் - கடகம்

மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்

அறிந்தாடும் ஆற்றா (து) அரங்கு" (Narayana Velupillai, 1998)

என்பது அற்புதத் திருவந்தாதி

பேய்வடிவு பெற்ற நிலை என்பது ஆடலரசனாகிய சிவபிரானோடு நீங்காது நிற்கும் நிலையாகும். இறைவனின் பேய்க் கணத்துள் ஒன்றாக மாறிய காரைக்காலம்மையார் அந்நிலையைத் தவிர வேறு எந்தப் பெரு நிலை வாய்க்கப் பெற்றாலும் அதை வேண்ட மாட்டோம் எனக் கூறுகின்றார். இச்செய்தியைப் பாடலாகவும் பதிவு செய்துள்ளார்.

"பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீ (து)

உறினும் உறாதொழியு மேனும் - சிறிதுணர்ந்தி

மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்தன் பேயாய

நற்கணத்தில் ஒன்றாய நாம்" (Narayana Velupillai, 1998)

என்பது அப்பாடல். காரைக்காலம்மையார் நல்வினை, தீவினையாகிய இருவினைகளும் நீங்கப் பெற்று மரணம் தவிர்ந்து இன்பப் பெருவாழ்வு பெற்றார். சிவனாரின் செந்தாமரை பூம்பாதங்களைச் சேர்ந்து முக்திப்பேறு அடைந்தார். இந்தச் சிவானந்த அனுபவத்தைச் செந்தமிழ்ப் பாடலாகச் சாசனம் செய்து வைத்துள்ளார்.

"காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்

மேலை இருவினையும் வேரறுத்தோம் - கோல

அரனார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்

சரணார விந்தங்கள் சார்ந்து" (Narayana Velupillai, 1998)

அம்மையார் பாடிய இந்தப் பாடல் கருத்தை உள்வாங்கிக் கொண்டு செந்தமிழ்க்கவி வலவராகிய சேக்கிழார் பெருமான், காரைக்காலம்மையார் புராணத்தில் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட அம்மையார் எழுதிய இறவாப் பெருநிலையைப் பாடுகின்றார்.

"நான் மகிழ்ந்து பாடி

அறவா! நீ ஆடும் போதுஉன்

அடியின் கீழ் இருக்க வேண்டும்" (Kalyana Sundaram, 1993)

என அம்மையார் இறைவனிடம் விண்ணப்பித்து அவ்வாறே இறைவனால் அருளப் பெற்றார்.

அவருடைய சீர்மையைப் பரவிப் பாடுதல் யாராலும் இயலாது என்னும் கருத்தமைய,

"மடுத்தபுனல் வேணியனார் அம்மைஎன மதுரமொழி

கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்தில்அவர்

எடுத்தருளும் சேவடிக்கீழ் என்று இருக்கின்றாரை

அடுத்தபெருஞ் சீர்பரவல் ஆர்அளவு ஆயினதுஅம்மா" (Kalyana Sundaram, 1993)

எனக் குன்றத்தூர் கோமான் அம்மையாரின் முக்திப் பேற்றை வியந்து பாடிக் காரைக்காலம்மையார் புராணத்தை நிறைவு செய்கின்றார்.

இத்தகைய பெரும் பேறுகளைப் பெற்றதனால்தான் சைவ உலகம் அம்மையாரை தலையாய அடியாராக வைத்துப் போற்றுகின்றது.

## கவிதைச் செல்நெறியில் கற்பனை வளம்

கருத்தும் கற்பனையும் கலியாணம் செய்து கொண்டால் அழகிய கவிதை பிறக்கின்றது. முத்தி, ஞானங்களில் மேம்பட்டு விளங்கினாலும் கவிஞர் என்கிற வகையில் காரைக்காலம்மையார் சிறந்த கற்பனாவாதியாகத் திகழ்கின்றார் எனில் அது மிகையாகாது. அற்புதத் திருவந்தாதியில் பல வெண்பாக்கள் கற்பனை எழில் சொட்டுபவையாக உள்ளன. திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகத்தில் ஆலங்காட்டு மயானமும் அம்மயானத்தில் சேய்கள் சூழப் பெருமானாடும் நடனமும் மிக அழகாக வருணிக்கப்படுகின்றன.

திரிபுரங்களை எரித்தவன் ஈசன். அவன் நெற்றிக்கண்ணை உடையவன். அவனுடைய மார்பில் முப்புரி நூல் வெண்மையாக ஒளிவீசித் திகழ்கின்றது. காரைக்காலம்மையார் சிவ தியானத்தில் ஈடுபடும்போது பெருமான் தலையில் சூடியுள்ள வெண்பிறையைக் காணுகின்றார். செம்மேனி அம்மான் தோளிலிருந்து கீழிறங்கும். வெள்ளைப் புரிநூலையும் காணுகின்றார்.

அவர்தம் பக்தி உள்ளத்தில் கற்பனை பளிச்சிடுகின்றது. பிறை நிலவிலிருந்து ஒரு பால் வண்ணக் கதிர் சிவன் மார்பின் வழியாகக் கீழிறங்கிப் படர்கின்றது. அந்தக் கிரணம் தான் வெள்ளைப் பூணூலாகச் சுடர்கின்றது எனக் கலையழகு மிளிரப் பாடுகின்றார்.

"பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையின்

ஒருகதிரே போந்தொழுகிற்(று) ஒக்கும் - தெரியின்

முதற்கண்ணான் முப்புரங்கள் அன்றெரித்தான் மூவா

நுதற்கண்ணான் தன்மார்பின் நூல்" (Narayana Velupillai, 1998)

என்பது அற்புதத் திருவந்தாதியை அணி செய்யும் வெண்பாவாகும்.

இறைவன் ஆலகால நஞ்சை உண்டான். அந்நஞ்சானது சிவனின் கண்டத்தில் நின்று விட்டது. ஆகையால் அவன் கண்டம் கறுத்து விட்டது. அந்தக் கறையானது சிவன் கழுத்தோடு மட்டும் போகவில்லை. அவன் தலையில் சூடியிருக்கும் வெண்ணிலவிற்குள்ளும் மணி மருவாய் நின்று வடுவாகி விட்டது எனக் காரைக்காலம்மையார் பாடுகின்றார். வெண்ணிலவில் இயல்பாய் இருக்கும் கலங்கத்தைச் சிவன் உண்ட விடத்திள் வெம்மை தாக்கியதால் ஏற்பட்ட கறை எனக் கற்பனை செய்கின்றார்.

"பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு

கண்டம் கறுத்ததவும் அன்றியே - உண்டு

பணியுறுவார் செஞ்சடைமேல் பால்மதியின் உள்ளே

மணிமறுவாய்த் தோன்றும் வடு" (Narayana Velupillai, 1998)

அம்மையாரின் கற்பனைகளை விளக்க மேற்கண்ட இருபாடல்கள் சான்று காட்டப்பட்டுள்ளன. திருவாலங்காட்டு மயானத்தில் ஈசன் ஆடும் ஆடலைக் காரைக்காலம்மையார் அழகு தமிழ் கொண்டு வருமித்துப் பாடும் திறம் நினைக்கத்தக்கது. மயானத்தில் வளைந்த பல்லையுடைய வண்ணச் சிறுகூகைகள் பிணத்தையும் மூளையையும் தின்றுவிட்டு ஓசை எழுப்புகின்றன. அச்சுடு காட்டில் பனை ஓலை போல் விரிந்த பரட்டைத் தலையையும் நெருப்பைப் போல் சிவந்த வாயையும் உடைய பேய்கள் ஆடுகின்றன. கூளிப் பேய்கள் குழல் ஓதுகின்றன. இச்சூழலில் குழகனாகிய பெருமானும் நடனம் புரிகின்றான் என்பது அம்மையாரின் வருணனையாகும்.

"வாளை கிளர வளைவாள்

எயிற்று வண்ணச் சிறுகூகை

மூளைத் தலையும் பிணமும்

விழுங்கி முரலும் முதுகாட்டில்

தாளிப் பனையின் இலைபோல்

மயிர்கட் டழல்வாய் அழல்சட்பேய்

கூளிக் கணங்கள் குழலோடு

இயம்பக் குழகன் ஆடுமே" (Narayana Velupillai, 1998)

என்பது திருப்பதிகப் பாடல்.

'தாளிய பனையில் இலைபோல்

மயிர்க்கட் டழல்வாய்' எனவும் 'அழல்வாய் அழல்கண்பேய்' எனவும் உவமை கூறி வருணிக்கின்றார் அம்மையார். அவர்தம் கவித்துவமும் கற்பனையும் நினைந்து இன்புறத் தக்கவையாகும்.

## முடிவுரை

சைவப் பெண்ணடியார்களுள் தலையாயவராகக் காரைக்காலம்மையார் விளங்குகின்றார். குழந்தைப் பருவத்திலிருந்து சிவனைச் சிந்தையுள் வைத்துச் சேவித்த அவர்தம் தீராத பக்திப் பெருக்கு அவரை அந்நிலைக்கு உயர்த்தியது எனலாம். அவர்தம் மெய்ஞான வாழ்வு பல சீரிய முடிவுகளைத் தமிழுலகிற்கும் சைவ மரபிற்கும் தெளிவாக உணர்த்துகின்றது, சிற்றிளம் பருவம் முதற்கொண்டு தம்மைச் சிவபக்தியில் அம்மையார் திளைத்ததற்குக் காரணம் முன்னைப் பிறவிகளின் தவப்பயனே என்பது புலனாகின்றது. அம்மையார் இல்லறத்திற்கு உரியவர் அல்லர் என்னும் உண்மையை அவருக்கு நிகழ்ந்த பொருந்தாத் திருமணமே உணர்த்தி விடுகிறது. இதைச் சேக்கிழார் பெருமான் தெளிவாக விளக்குகின்றார். அம்மையார் திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்களின் இறுதி இருப்பாடல்களிலும் தம்மைக் காரைக்கால் பேய் எனச் சுட்டிக் கொள்கின்றார். இதனடிப்படையில்தான் சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் 'பேயார்க்கும் அடியேன்' எனக் குறிக்கின்றார் என்பதை அறிய முடிகின்றது. காரைக்காலம்மையார் தாம் பாடிய அற்புதத் திருவந்தாதியில் 'கருத்தினால் நீ கருதிற்றெல்லாம் உடனே திருத்தலாம்' சிவனடியைச் சேவித்தால் எனத் தன் உள்ளத்தை நோக்கிப் பாடுகின்றார். அவர் சிவனை எப்போதும் சிந்தையில் இருத்தியதால் அம்மையார் வேண்டிய போதெல்லாம் மாங்கனிகள் வந்தன. அவருடைய திருமேனி என்புருவாக மாறியது என்பதை அம்மையாரின் பக்தி வரலாறு நிதர்சனமாக உணர்த்துகின்றது. அம்மையார் வாழ்வில் இருவினை ஒப்பு ஏற்பட்டு மலபரிபாகம் உண்டாகி இறையருளால் அவன் சரண அரவிந்தகளைச் சார்ந்தார் என்பதை அற்புதத் திருவந்தாதியில் காலனையும் வென்றோம் எனத் தொடங்கும் வெண்பாவில் தெளிவாகப் புலப்படுத்துகின்றார். இதை ஆதாரமாக வைத்துத்தான் செந்தமிழ் வல்ல சேக்கிழார் பெருமான், காரைக்காலம்மையார் புராணத்தின் இறுதியில் அம்மையார் சிவனடிக் கீழ் செவ்வியைச் சிறப்பித்து பாடியுள்ளார் என்பதையும் தெளிய முடிகின்றது பக்திச் செவ்வியாக விளங்கிய அம்மையார் முத்தமிழ் வித்தகியாகவும் திகழ்கின்றாள் என்பதை அவர்தம் மூன்று பனுவல்களின் மூலம் அறிய முடிகின்றது. அவர்தம் இலக்கியச் செல்நெறி பத்திமையை மையமாய் கொண்டு இயங்குகின்றது. அவ்வாறு இருப்பினும் கற்பனை வளமும் வருணனை நலமும் உவமை நயமும் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்றன என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வெளிக் கொணர்ந்துள்ளது. காரைக்காலம்மையாரைப் பற்றிப் பிற அருளாளர்கள் தங்கள் படைப்புகளில் குறிப்பிட்டுள்ளார்கள் என்பதையும் ஆராய இடமுண்டு தமிழுலகம் அம்மையாரைப் பற்றிய இத்தகைய ஆய்வுகளில் முனைந்து ஈடுபடும் என நம்பலாம்.

## References

Kalyana Sundaram, T.V. (1993) Sekkilar Peruman Aruliya Periya Puranam, 1st Edition, Chennai, India.

Narayana Velupillai, M. (1998) Panniru Thirumuraikal, 2nd Edition, Chennai, India.

Puliyur Kesigan, (2016) Thirukural, Poompugar Pathippagam, Chennai, India.

Subramanian, S.V. (2003) Sanga Ilakiyam Pathupattu, Kovilur Madalayam, Kovilur, India.

Sudaramoorthi Swamigal, (2005) Thevaram, 11th Edition, Kasi Thirumadam, Thirupananthal, India.

Vadivelu Mudhaliyar, (2011) Thayumana Swami Padalkal, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License